# 24. குடும்பநல்வாழ்வு

குடும்ப நலம் என்பது சமுதாயத்தில் வாழும் குடும்பம் என்ற அமைப்பினை பேணிக்காக்கவும், இதில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்யவும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது அவசியம். குடும்ப நல மையங்களை உள்ளாட்சிகள் அமைத்து பராமரித்தல், பயனாளிகளை கண்டறிதல், அரசு சாரா அமைப்புகளை ஈடுபட செய்தல், குடும்ப நலம் குறித்து பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல், திட்டத்தை செயற்படுத்துதல், மக்களுக்கு தகவல்களை எடுத்துரைத்தல், நிதியுதவி, ஆண்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை திட்டம் போன்ற திட்டங்களையும் வட்டார மற்றும் மாவட்ட குடும்ப நல பயிற்சி மையம் அமைக்கும் திட்டங்களையும், பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல் திட்டத்தையும் ஆய்வு செய்ய ஊராட்சி ஒன்றியங்களுக்கும்,மேற்காண் திட்டங்களை மறு ஆய்வு மற்றும் மேற்பார்வையிட மாவட்ட ஊராட்சிகளுக்கும் அரசு ஆணை எண். 220, ஊரக வளர்ச்சித் துறை, நாள். 4.7.97ல் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. குடும்பநலன் சார்ந்த பொருளின்பால் விவாதிக்கும் போது, ஆரம்ப சுகாதாரம் என்ற பொருள் இதற்கு முன்னர், ஊராட்சி ஒன்றியத்திடமும், ஜில்லா போர்டுகளிடமும் இருந்தது. 1984ம் ஆண்டில் அரசானது, இந்த சேவைகள் மற்றும் மருத்துவர்கள் மருத்தவ பணியாளர்களை தன்வசம் அழைத்துக் கொண்டது. இருப்பினும் பல மாநிலங்களில் ஆரம்ப சுகாதாரம் நிலையில் மற்றும் துணை சுகாதார நிலையங்களை அதில் பணிபுரியும் மருத்துவர்கள்/ பணியாளர்கள் சம்பந்தப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புக்களால் நிர்வகிக்கப்பட்டு மேலாண்மை செய்யப்படுகின்றன. 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் உள்ள மருத்துவ சேவை புரியும் மருத்துவர்கள் மற்றும் இதர செவிலியர்கள் அரசாங்க ஊழியர்கள் என்ற 109ம் பத்தியில் கூறப்பட்டுள்ளது. இருப்பினும், 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், ஊராட்சி ஒன்றியங்கள் மருந்தகங்களை, குழந்தை நல மையங்கள், அமைத்து அதனை பராமரிக்கும் பொறுப்பையும், தாய் சேய்நல சேவைகளை தொடர்ந்து ஊராட்சி ஒன்றியங்கள் அளிக்கவும், வழிவகைகள் செய்யப்பட்டுள்ளளது. மேலும் ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் பகுதிகளில் தடுப்பூசி, மறு தடுப்பூசி போன்ற பணிகளையும் நிறைவேற்ற கடமைகள் உள்ளது. குழு உறுப்பினர்களின் விவாதத்தின் போது உள்ளாட்சி அமைப்புகள் நல்ல முறையில் செயல்படும் மாநிலங்களில் குடும்ப நலன் சார்ந்த நிர்வாக முறை ஊரக உள்ளாட்சி

அமைப்புகளிடமே உள்ளது என்றும் உள்ளாட்சி அமைப்புகள் வலிமை பெறும் இத்தருணத்தில், குடும்பநலம் சார்ந்த நிர்வாகப் பொறுப்புகளை உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்க கருத்து தெரிவித்தனர். இப்பொறுப்புகள், ஒட்டு மொத்தமாக ஒப்படைக்கப்படாவிடினும், படிப்படியாக ஓராண்டு காலத்திற்குள் ஒப்படைக்கும் வகையில் அரசு நடவடிக்கைகள் எடுக்கலாம். இந்தப் பின்னணியில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்கும் வகையில் இக்குழு கீழ்கண்ட இனங்களில் பரிந்துரை செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்

1. குடும்ப நல மேம்பாட்டிற்க்கென செயல்படுத்தப்படும் திட்டங்களில் ஒன்றான கருவுற்ற தாய்மார்களின் மருத்துவ வசதிகள் குறித்து சுகாதாரத் துறை பணியாளர்கள், பதிவேடுகள் பராமரிப்பதற்கு உதவுதல்.

2. கர்ப்பிணி பெண்களின் பேறுகாலங்களில் முறையான மருத்துவ உதவிகள் அளிக்கும் பொருட்டு அந்தந்தப் பகுதிகளில் உள்ள தாய் சேய் நல மையங்களுடன் தொடர்பு கொண்டு தேவையான உதவிகளைச் செய்தல்.

3. பேருகாலத்திற்கு முன்னும் பின்னும் எடுக்க வேண்டிய மருத்துவ நடவடிக்கைகள், சுக பிரசவம் ஆவதற்கு வேண்டிய அறிவுரைகள் மற்றும் பிறந்த குழந்தைக்கான மருத்துவ பாதுகாப்பு ஆகியவை குறித்து மருத்துவ பணியாளர்கள் தக்க பயிற்சிகள் பெறுவதை உறுதி செய்து அவர்கள் முறையான பயிற்சி பெற உதவுதல்.

4. அந்தந்தப் பகுதிகளில் பணியாற்றும் பல்வேறு பணி தொடர்பான தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தர்ம ஸ்தாபனங்களின் ஆதரவைத் திரட்டி, கருத்தரித்திருக்கும் பெண்கள் அனைவரும் மருத்துவ வசதி பெறும் வகையில் தாய் மற்றும் குழந்தைகயின் நோயற்ற வாழ்விற்கான அடிப்படை ஆதார வசதிகளைப் பெருக்குதல்.

5. குழந்தைகளுக்கு தாய்பால் அளித்தல் மற்றும் நோய் தடுப்பு சக்தியை அதிகரித்தல் போன்ற பொருள்களின்பால் பெண்களிடையே போதிய விழிப் -புணர்ச்சியை ஏற்படுத்த மருத்துவத் துறை பணியாளர்களுக்கு உதவுதல்.

6. வைட்டமின்-அ, இரும்பு மற்றும் அயோடின் சத்துக்குறைவை கட்டுப்படுத்துதல், வெறிநாய் கடி தடுப்பு மற்றும் சிகிச்சை ஆகிய சேவைகளை ஒருங்கிணைத்து சேவைகள் திறம்பட வழங்கும் வகையில் உதவுதல். இது தொடாபாக தாய்சேய் நலப் பணியாளர்களுக்காக கிராம அலுவலர்களுடனும், குடும்பநலத் துறையுடன் சேர்ந்து காலமுறையிலான ஆய்வுக் கூட்டங்களை நடத்தி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு உதவலாம்.

7. உயிர்கொல்லி நோய் , பால்வினை நோய்கள் மற்றும் எய்ட்ஸ் நோய் குறித்து சிறப்பு விழிப்புணர்வு முகாம்களுக்கு கிராம அளவில் ஏற்பாடுகள் செய்தல்.

8. கிராம அளவில் மகளிர் மன்றங்களையும், இதர பிற மக்கள் குழுக்களையும் அமைத்து கருவுற்றிருக்கும் பெண்கள் மற்றும் பின்னாட்களில் கருவுறவிருக்கும் பெண்களுக்கும் பிரசவத்திற்கு முன்னும், பின்னும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள், சிறுகுடும்ப நெறி, தாய்ப்பால் போன்றவற்றின் மீது சிறப்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் குடும்பநலனைக் காக்க தக்க அறிவுரைகள் வழங்கும் வகையில் உதவலாம்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. கிராம ஊராட்சிகளிடமிருந்து பெறப்படும் குடும்பநலம் சார்ந்த புள்ளி விவரங்களை ஊராட்சி ஒன்றிய அளவில் தொகுத்து பராமரிக்கலாம். ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து மாவட்ட ஊராட்சிக்குத் தேவையான புள்ளி விவரங்களை தக்க பரிந்துரைகளுடன் கொடுத்து திறம்படத் திட்டமிடுவதற்கு உதவலாம்.

2. கிராம அளவில் மற்றும் பல கிராம ஊராட்சிகளில் நடைபெறும் குடும்பநலன் காக்கும் திட்டங்களை மேற்பார்வையிட்டு, அவற்றின் செயல்பாட்டில் ஏற்படும் இடையூறுகளைக் களைய தேவையான நடவடிக்கைகள் எடுக்கலாம்.

3. ஊராட்சி ஒன்றியப் பகுதியில் மகப்பேறு மையங்கள், சிறுகுடும்ப நெறி

சார்ந்த அறுவை சிகிச்சை அளிக்கும் வசதிகள், துணை சுகாதார மையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார மையங்களை நிறுவி பராமரிக்கலாம்.

4. குடும்பநலத் திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மருத்துவமனைகளுக்கு தேவையானத் மருத்துவக் கருவிகள் வழங்குவதற்கு குடும்பநலத் துறையின் சம்பந்தப்பட்ட அலுவலர்களைத் தொடர்பு கொண்டு மேல்நடவடிக்கைகள் எடுத்தல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. மாவட்ட அளவில் குடும்பநலன் சார்ந்த திட்டப் பணிகளின் செயலபாட்டு தகுதி அறிக்கையை தயாரித்து, அதனை பிற மாவட்டங்கள் மற்றும் மாநிலத்தின் அறிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்து அந்தந்த மாவட்டத்திலுள்ள அறிக்கையின் ஏற்றத்தாழ்வுகளின் மேல் கருத்துரைகளை மாவட்ட ஊராட்சிகள் வழங்கலாம். இதனை அடிப்படையாகக் கொண்டு, மாவட்ட குடும்பநலத் திட்ட கருத்துருக்களை தயாரித்து, செயல்பாட்டிற்காக அதனை மாநில குடும்ப நல இயக்குநருக்கு அனுப்பலாம்.

2. திட்டங்களின் செயல்பாட்டிலுள்ள குறைகளை பார்வையிட்டு கண்டறிந்து அவைகளை நீக்க சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் ஆதரவினைத் திரட்டி, திட்டங்கள் திறம்பட செயலாக்க வழிவகைகள் செய்யலாம்.

3. பொருளாதார வளங்களைப் பொறுத்தவரை கிராம மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவிலான வளங்கள் மற்றும் ஆதாரங்களையும், துணை வரவு செலவு திட்ட வள ஆதாரங்களையும் உயர்த்தும் பொருட்டு சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் அந்தந்தப் பகுதிகளில் பணியாற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தர்ம ஸ்தாபனங்களை அணுகி தேவையான முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

4. குடும்பநலன் சார்ந்த திட்டங்களின் முறையான நடவடிக்கைகளுக்கும் செயல்படுத்தப்படும் பணிகளின் மீதான சமூக தணிக்கை முறைகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் காப்பாளர்களிடமிருந்து உதவிகளைப் பெற்று

ஒருங்கிணைத்தல்.

5. பேறுகால காப்பு பணிகள் குறித்து மாவட்ட அளவிலான விவரக்குறிப்பினை தயாரித்து வழங்குதல் மற்றும் தகவல் பரிமாற்ற மேலான்மை முறையினை மேம்படுத்துதல்.

6. ஊராட்சி ஒன்றியத்தால் குடும்பநலன் சார்ந்த திட்டப்பணிகளின் நடவடிக்கைகளின் செயல்விளைவுகளை மதிப்பிட்டு குறைகளைக் கண்டறிந்து அவற்றை களைவதற்கான வழிமுறைகளை ஆய்ந்து அறிவுரைகள் வழங்கல்.

7. அந்தந்தப் பகுதிகளில் தேவையான மருந்துப் பொருட்கள் இருப்பில் இருக்கவும், இருப்பில் இருக்கும் மருந்துப் பொருட்களை வைத்து பாதுகாக்க தேவையான இடவசதி, குளிர்சாதன வசதிகள் ஆகியவை ஏற்படுத்தவும் அரசுக்கு பரிந்துரைத்தல்.

8. குடும்ப நலத் திட்ட இயக்கங்களிலும் திட்டத்தின் செயல்பாட்டிலும், தனியார் மருத்துவர்களையும், மருத்துவமனைகளையும் ஒன்றினைத்து மருத்துவ சேவைகள் அனைத்து மக்களுக்கும் கிடைக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

9. குடும்பநலத் திட்டத்தின் நடைமுறை செயல்திறனை மேம்படுத்துவதற்கு கருத்தரங்குகள், கலந்துரையாடல் நிகழ்ச்சிகள், பணிமனைக் கூட்டங்களையும் மாவட்ட அளவில் நடத்துதல்/நடத்துவதற்கு உதவுதல்.